# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| **Er. A.ANTONYPADOVARAJ** | **Er. V. ASHOKKUMAR** | **Er. R.BADRINARAYANAN** |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/ தீர்மானம் எண்.30 /தேதி **1.12.2016.**

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் – 50வது மாநில பொதுக்குழு மற்றும் மாநில செயற்குழு தீர்மானம் – உதவி செயற் பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வு குறைந்தபட்ச அனுபவ காலத்தை உதவி செயற் பொறியாளர் / பொதுவியல் பதவி உயர்விலும் பாரபட்சமின்றி கடைபிடித்திட வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை:
1. மாநில பொதுக்குழு தீர்மானம் கடித நாள் 21.07.2016.
2. மாநில செயற்குழு நாள் 26.11.2016.
3. வாரிய பணிவிதி – 94 – இணைப்பு–III.

---

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 50வது மாநில பொதுக்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் மீது வாரியம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி மாநில செயற்குழு கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

**தீர்மானம்–30**

உதவி செயற் பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வுக்கு உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பொறியாளர்களுக்கு குறைந்த பட்ச அனுபவம் 3 ஆண்டுகளாக பணிவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதே போன்று பணிபுரியும் பொதுவியல் பொறியாளர்களில் உதவிப் பொறியாளர்களுக்கு 3 ஆண்டுகள் எனவும் இளநிலைப் பொறியாளர் முதல் நிலைக்கு 7 ஆண்டுகள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பாரபட்சமான நிலையினால் பொதுவியல் பிரிவில் உதவி செயற் பொறியாளர் / பதவி உயர்வு வழங்குவதில் பட்டயப் பொறியாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

பொதுவியல் பிரிவில் பட்டயப் பொறியாளர்கள் வாரியப் பணியில் உதவி வரைவாளர், வரைவாளர், நில அளவையாளர், இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை, இளநிலைப் பொறியாளர் முதல் நிலை என்று பல நிலைகளில் பணிகளை மேற்கொண்டு சுமார் 28 ஆண்டுகள் மிகச்சிறந்த அனுபவம் பெற்றுள்ளனர். மேற்கூறிய பல்வேறு பணிக்காலங்களை கருத்தில் கொள்ளாமல் இளநிலைப் பொறியாளர் முதல் நிலையில் மட்டுமே 7 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்பதால் பலர் உதவி செயற் பொறியாளர் பதவி பெறாமலேயே பணி ஒய்வு பெறுகின்றனர். வாரியம் பிற பணித் தொகுதிகளைச் சார்ந்துள்ள பணியாளர்களுக்கு குறைந்த பட்ச பணிக்காலத்தை நீக்கியும் குறைத்தும் உத்தரவிட்டதன் மூலம் அவர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

எனவே, உதவி செயற் பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வுக்கு குறைந்தபட்ச அனுபவ காலம் உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் முதல் நிலை ஆகியோருக்கு 3 ஆண்டுகள் என உள்ளது போன்றே அனைத்து உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுகளிலும் உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் முதல் நிலைக்கு 3 ஆண்டுகள் என உத்தரவு வழங்கிட வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

03/12/16.

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

நகல்
செயலாளர் / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.